25.2.2022

அசல் வழக்கு எண்: 299/2014

பி.வா.சா.1 சாட்சி குமார் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி பிரதிவாதி தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி

1ம் பிரதிவாதி நிறுவனம் எனக்கு நிறுவனம் தொடர்பான வழக்குகள் நடத்திடவும், எதிர் வழக்கு செய்திடவும், நிறைவேறுதல் மனு நடவடிக்கை பேராணை மனு போன்ற நடவடிக்கைகள் நிறுவனத்தின் சார்பாக செய்திட நான் சார்ந்த GHCL Limited நிறுவனத்தின் தலைமை நிதி அதிகாரி மற்றும் நிறைவேற்றுதல் இயக்குனர் – நிதி அவர்கள் எனக்கு கடந்த 01.10.2020ம் தேதி அளித்த அதிகார கடிதத்தின் ஒளிப்பட நகல் மற்றும் இது தொடர்பாக என்னை GHCL நிறுவனத்தின் இயக்குனர் குழுமம் என்னை 28.11.2013ம் தேதி தேர்ந்தெடுத்தற்கான தீர்மானத்தின் சான்றிட்ட நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) (எண்ணம் 2) பி.வா.சா.ஆ.9 ஆகும். (வாதி தரப்பில் GHCL நிறுவனம் கொடுத்த அதிகார கடிதம் தொடர்பாக பிரதிவாதி தரப்பில் எதிர் வழக்குரையிலும், கூடுதல் ஆவணங்கள் தாக்கல் செய்வதற்காக போடப்பட்ட மனுவிலும் சொல்லப்படவில்லை என்ற ஆட்சேபணை முன் வைத்தனர், இது தொடர்பாக இரு தரப்பினரும் இறுதி வாதுரையின் போது வாதம் செய்து கொள்ளும் உரிமையை இரு தரப்பினருக்கும் Reserve செய்து அனுமதி கொடுக்கப்பட்டு தற்காலிகமாக மேற்கண்ட ஆட்சேபணை நிறுத்தி வைக்கப்படுகிறது).

(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி பி.வா.சா.1 குறுக்கு விசாரணை வேறு ஒரு நாளைக்கு ஒத்தி வைக்கப்படுகிறது).